MASTER NEGATIVE NUMBER

6039.18

நற்போதகம்
[Vol. 2, no. 8]
August 1850

Record no. 2697

Naṟpōtakam

[Vol. 2, no. 8]

August 1850

Record no. 2697

நற்போதகம்.

அட்டவணை :

சுவிசேடகவிராய வேதநாயகசாஸ்திரி

பாடின

ஞானவுலா

காப்பு.

—o—

பூதலத்தில்வாழ்கலாம் பொன்னுலகும்புக்கலாந்
தீதனைத்துமோடிச் சிதைந்துபோமாதலினுல்
ஞானபரிசுத்தாவி நற்றுணைகொண்டேசுவின்மேல்
ஞான்வுலாவைச் சொலுமென்ஞு.

கடவுள்வாழ்த்து. கண்ணி. சஙு,

சீர்சிறந்த தேவ திரித்துவத்திலொன்ருன
நேர்சிறந்தநீதி நெறியோனைப் பார்சிறந்த
மெய்யான்வேதம் விரித்துரைத்தவித்தகனைத்
துய்யோன்பரமசுதாகரனைப் பொய்யாங்
கலைபல நூலக்கியானக்கன்ம விருணீக்கத்
தலைமையெனவந்த தவனைச் சொலவரிய
மாத வனையாத்தும மணவாளனைப் பரம
காதலனைப் பாவிகடங் கண்ணுனை யாதவனைத்
தன்னுனைத் தானுனைச் சற்சிதானந்தனை யென்
முன்னுனை முன்னவனை முன்னேனைப் பொன்னுட
டரசுபுரந் தரனையம்பரனை யேழா
முரசிரங்கத் தோன்ருதி மூலப்பெருமானைச்
சங்கீர்த்தனனையடர் சங்கிராம கெம்பீர
துங்காதி துங்க துரந்தரனைச செங்கோல்கைக்
கொண்டானை யூதாவின் கோத்திரத்திலேபிறந்த
கண்டீரவனைக் கடாட்சனைப் பண்டாதி

கொண்டாடத் தீவினைமேற் கொண்டானைத் தொண்டர்துயர்
கண்டானைச்சேரலுஞ்சொற கற்கண்டானைத் தண்டானைக்
கோமானை ரட்சிப்பின் கொம்பானைக் கும்பானைப்
பூமானைச் சீமானைப் புண்ணியனை மாமாது
வந்தானைப்பெந்தனைத்தும் வாழவந்தானைப்பெரிய
தந்தானைச்சீவனையுந் தந்தானைச்சொந்தானைக்
கோலாகலனையருட் கோலானைக்கோலானை
மேலாசலனைவிமலனைச் சூலானைச்
சாஸ்திர தாஷடீக சமஸத சாமர்த்தியனை
நேத்திரகிருபாகர நிராணியனைத் தோத்திரமென்று
கோமண்டலாதிபர்பொன் கொண்டு தெண்டனிட்டுநிற்கும்
பூமண்டலீசுரனைப் புங்கவனைத் திமண்
டலகை பதறி யதிர்ந்து நடுங்கத்
தலைசிதறப்போட்டு தைத்தானைக் குலவழிவந்
தத்தானையம்மானை யாண்டானை மீண்டானை
நத்தானுவேலை நயந்தானைச் சுத்த
சுவிசேடகனைத் துலாம்பரசுத்தாங்க
வபிடேகனைத் திருப்பாடானைக் கவிராயர்
போற்றவளர் கெம்பீர பூர்த்தியனைக் கீர்த்தியனைச்
சாற்றரிய மானிடவ தாரனைத் தோற்றப்
படையானைத் தாரம்படையானை வலலத்
துடையானை நீதியுடையானைக் கோடையானைத்
தானத்தானைப் பரமதானத் தானைத் தேவ
மானத்தானைப் பெருமானத்தானை ஞானக்
கருணாம்பரனை யருட்காம்பீர செம்பொற்
சரணம்பியனைத் தரனை யரணும்
பரனை வ[illegible]னைப் பரமேசுரனைத்
திரனை [illegible]வர்க்குஞ் சிரனை நரனை
யடைப்பு[illegible] சுவனையதிர விடித்து
நடுப்பு[illegible]நின்றத்தை நசுக்கி யெடுப்பான
சீனை ய[illegible]மைச் சிறையைச் சிதறவடித்
தோணியைக் காட்டையும் விட்டோட்டியே தானாக
மோசேயுடைத்த முதற்பலகைக் கொப்பான
பூசாப்பலகையையும் போட்டுடைத்துக் கூசாமற்
பெட்டியிருந்த பெருந்தலத்தை யும்பலியாய்ச்
சுட்டெரித்துக் காற்றினிலே தூற்றிவிட்டுக் கெட்டவஞ்சக்
கொள்ளிச்சர்ப்பத்தின் குடலை யறப்பிடுங்கிக்
கள்ளத்தலையைக் கனன்றுதைத்தே யெள்ளிப்
பரலோகவாயிற் படாரக்கதவை
விரிவாய்த்திறந்துசுடர் மின்னுங் கரவாளின்
கேருபீன் காவலைக் கீழாக்கி யெதிர்க்கநின்ற
சேருபீமைத்திகைக்கச் சென்றுதள்ளி யேராத
திரையைக்கிழித்துச் சேரக்கூடாத
பெருவெளிச்சத்தையும் பிளந்து விரிவான
வுன்னதத்துக்கப்பா லுயர்ந்தபரவெளியின்
சன்னதிமேற்சென்று இருபாசனத்திற் றுன்னவலத்
தேறிச்சிறையாக்குதலைச் சிறையியற்றிப்
பேறதளிக்கும் பெருமானை வீறின்
கிரீடாதிபனைக் கீர்த்திப்பிரதாபப்
புருடாதிபபூடணனைத் தெருடேர்ந்த
மாசற்றதேவன் மகனை மனுமகனை
யேசுக்கிறிஸ்தென் னிறையோனைத் தேசுற்ற
நேசத்தயாப நெடுங்கடலை நாசரேத்
தேசுக்கிறிஸ்தென் னிறையொனை யாசற்ற
ராசத்துவ மகத்துவ ஞானப்பிரவடீக
யேசுக்கிறிஸ்தென் னிறையோனை நேசித்துத்
தோஸ்திரித்து ஞானவுலாச் சொல்லுதற்கிங் கேழையெனைப்,
பாத்திரமாக்கொள்வாய் பராபரனே சாஸ்திரிகள்
போற்றுமலர்ச் சேவடியைப் புந்தியில் வைத்தாசரிதது
நாற்றிசையிலேத்தவரு ணல்குவா யாற்றுமத்தா
லுன்னைப்புகழ வுனைத்துதிக்க வுன்சரணந்
தன்னைப்பணியத் தயைசெய்வா யுன்னருளே
நாடத்தயைசெய்வாய் நன்மைசெய்வா யென்கலிகெட்
டோடத்தயைசெய்வா யுண்மைசெய்வாய் பாடத்
தயைசெய்வாய் நித்தியநின்றுண்மலனைப் போற்றத்
தயைசெய்வாய் நல்வாக்குத் தந்தே தயையெனக்குச்
செய்வாய் நீயென்றுயரந்தீர்ப்பாய் நீயல்லாதார்
செய்வாரொனக்கிரக்கஞ் செய்குவா ராயாவே
யத்தமுறும் வாழ்விலலையாம னல்லறிவின்
புத்தியெலாந் தந்தெனக்குப் போதிப்பாய் நித்தனுனே
யல்லாதுவேறுதுணை யாருமிலையென்பதுனக்
கெல்லாம் வெளியாயிருக்குமே வல்லாய் நீ
யின்னமுலகிலிடுக்கணுற விட்டகன்றாற்
பின்னையெனக்கெங்கே பிழைப்புண்டென்னுயிர் போன்
போனாலுமெய்மடிந்து போனாலுமுனைவிட்டுப்
போனலிடமிழந்து போவேனே யானாலும்
பாவத்திலேபிறந்த பாவிநான்பாவமறத்
தேவத்திரவியத்தைச் சேர்ந்தகாற் சாவத்தை
யேற்றவுனி னீதியென தேதமெலாந்தீர்ப்பதனன்
மாற்றமெனக்குண்டோ வழுத்துவேன் றோற்றமுடி.

தேவலட்சணம். ௨௪.

வில்லாதானேர்பழுது மில்லாதானுண்மகிமை
யெல்லாமுரைக்க வெளிதாமோ சொல்லுவதற்
கொப்பொன்றிலாத வுயர்ந்தமகிமையுளோன்
றப்பொன்றிலாதசறுவேச னப்பன்

சடமிலான் ருய்தந்தை தாரந்தமரில்
விடமிலானேரிடத்திலில்லான் விடமிலான்
மின்ஞர்களிலே விகாரமிலான் வேடமிலா
னின்னுதரும்பகையு மில்லாதான் வன்னமிலா
னீறிலா னூர்பேரிலானே ரெதிரியிலான்
மாறிலாதானளவு மட்டுமிலான் றூறிலா
னெங்குமிருப்பானி ருதயத்துளுந்தரிப்பா
னங்குநடப்பதறிந்திருப்பா னிங்கு
ருரு. மிருப்பானெலாமறிவா னெவ்வுயிர்க்குந்தாயா
யிருப்பானெளியோர்க்கிரங்கிப் பொருப்பான
சூத்திரத்துங்காணுன சொருபத்தினுமடங்கான்
சாத்திரமாறுங்கடந்த தாஷடீகனேத்திரத்தாற்
கண்டெதிர்க்கக்கூடாத காரணத்தான் காவலர்கள்
கொண்டெதிர்க்கக்கூடாக் கொடையினனண்டர்கோ
னித்தியனேர்நெறியோனீதிக் கெரிபந்தன்
சத்தியனஞானதயையாள னுத்தமநற்
பட்சமிரக்கம் பரிசுத்தமுஞ் சிறந்தோன்
றட்சணைத்தீண் ாத துாராசனட்சயஞ்செய்
கூய. பாக்கியன்ஞானப்பிரகாசன் பரஞ்செகமுண்
டாக்கியனன்பனருளொளியோன் வாக்கியம்
பிசகான் வசனம் பேசான் பெரிய
நிசவான் சொற்சொன்னபடி நிற்பா னசையா
னுருக்கவிரக்கமுயர் நீண்டசாந்தப்
பெருக்கக்கருணைவைத்துப்பேணி விருப்பத்தோ
டாக்குந்தலைமுறைக ளாயிரமட்டுண்மைவைத்துக்
காக்குங்கிருபா கடாட்சத்தா னேக்கவுயர்
மந்திரனேவேதை வசனிப்பேன் வானிலுற்ற
சந்திரனே சூரியனே தாரகையோ சுந்தரமோ
கூரு. செல்வோமலையோ செகமோர் புனற்கடலோ
வல்லே ரவெளியோ வாரணமோ வெல்லையிலாத்
தற்பர ாசித்துருவோ சத்தியமோ சற்குருவோ
சிற்பரமானந்தத் திருவடிவோ வற்புதமோ
வுற்பனமோமுற்பொருளோ வொப்புவமைக் கானவொரு
விற்பனமென்றுரும் விபரிக்கான் செப்ப
வரியநெறிபத்தடையாளம் பத்துப்
பெரிதெண்குணமுடைய பேறேன் நெறியாநாட்
பாவத்தையுந் தெரிந்த பாவத்தையுஞ செனன
பாவத்தையுங் கொல்பவநாசன் சாபத்தைத்
எய தீர்த்தோனரும் பிணியைத்தீர்த்தோன் பலபவமுந்
தீர்த்தோனெனதுகலி தீர்த்துவிட்டோ னேத்தரிய
மேகாசனத்தான்மா விண்ணேர்புடைசூழ
வாகாசவீதிவெழு மானந்த ஞகாச
னத்தெழுங்காட்சிக் கெளியனறபரமனற்றார்மன
நற்றியெழு நற்கருணை நாயகத்தான் பொற்றகமை.

தசாங்கம். கய.

சீவாடவளைத் திருவிவாகம்புரியத்
தேவாடெனவரு சீயோனமலையான் காவாதி
பாவத்தைப்போக்கப் பளிங்கைப்போற்பாய்ந்தோடு
மாவிப்பரம சீவாற்றினன் பூவைத்தன
எரு. பொற்பரமராச்சியத்தைப் போலுயர் காணுக்கி
நற்புகழ்நீடும்பரம நாடடினன் சொற்பெரிய
மோக்கிடத்தினின்றிறங்கு முக்கியபரிசுத்தாங்க
பாக்கிய நவ யேருசலேம் பட்டணத்தா னேக்கியிரந்
தாஞ்சுக்கண்முத்தியர்களாவியின லன்புயர்த்தி
வாஞ்சிக்கும்ஞான செபமாலையா ஞஞ்சொலிக்க
வந்தரத்திற்றேன்றியகில சங்காரம் புரியுஞ்
சுந்தரவெண்மேகத் துரங்கத்தான் கொந்தளித்து
விண்டலத்துக்கப்பால் வெளிச்சத்துலாவுபர
மண்டலத்துக்கேருபீன் வாரணத்தா னண்டரொழுந்
அய. தெக்காளசத்தமிடித்துல கெங்குந் தொனிக்க
வக்காலத்தார்க்கு மணிமுரசான் குக்கூவென
றஞ்சுமலகையழியக்கிறிஸ்தவர்கள்
சொஞ்சுஞ்சிலுவைக் கொடியினன் கெஞ்சி
நாருஞ்சுராரு நரகருமற்றுருஞ்
சிரகம்பத்தாற்றெழு செங்கோலான் பரதேவர்.

யூதபுராதனம்.

எவது) இயந்திரசாஸ்திரம்.

(தொடர்ச்சி.)

—o—

இயந்திர சாஸ்தீரமானது இயக்கத்தையும் அதின் தன்மை பலம் பிரமாணம் இவைகளையுமாத்திரமல்ல அவைகளை வேண்டிய அளவாய்க்கதிப்பிப்பதற்கும் திட்டப்படுத்துவதற்கும், அவை பலதொழிலுக்கு உபயோகப்படும்படி வேண்டிய சூத்திரங்கள் செய்வதற்கும் ஏற்ற விதிகளையும் போதிக்கிறது. ஆகையால் இயந்திர சாஸ்திரம் மிகவும் விரிவானதும் எளிதிற் படித்தறிய அரிதானதுமாம். அதின் மூலாதாரங்களை இங்கே காட்டவேண்டுவதில்லை. ஆப்பு, கொட்டாப்புளி, கெடிகாரம், பொதிவண்டி, புகைவண்டி, இவைகள் இயந்திர சாஸ்திரத்தைச் சேர்ந்த கருவிகளுஞ் சூத்திரங்களுமாயிருக்கின்றன.

எபிரேயர் அந்தச் சாஸ்திரத்தின் மூலாதாரங்களை யதிகமாய்ப் படித்தறிந்திருந்தார்களென்று சொல்லத்தகுந்த திட்டாந்தங்களில்லை யாகிலும் ஒரு பாகமாயதை யறிந்திருப்பார்கள். திட்டாந்தமாக எருசலேம் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தைச் சுற்றி யிருபத்தைந்துமுழ நீளமான

பரும் வெள்ளைக் கற்றூண்கள் நிறுத்தியிருந்தனவே அவற்றிலுள்ள தூணகள் ஒவ்வொன்றும் ஒரே கல்லாயிருந்தது. எபிரோயர் எப்படியும் இயந்திரசாஸ்திரத்தை யறிந்து அதைச்சேர்ந்த சில சூத்திரங்களைக் கையாடினாலல்லது அப்பேர்ப்பட்ட கற்களைக்கொண்டுவரவும் நிறுத்தவும் ஏதுவிருக்கமாட்டாது.

அவது) சிற்பசாஸ்திரம்.

மாளிகைகளை யொழுங்காயும் அலங்காரமாயுங் கட்டவும் சொரூபங்களைப் பண்ணவும் வகையைக்காட்டியதே சிற்பசாஸ்திரமாம்.

எருசலேம்நகரத்திலுள்ள தேவாலயம் மற்றுமுண்டான பெரியமாளிகைகள் ஆசரிப்புக்கூடாரம் இவைமுதலியவைகள் எபிரோயர் சிற்பசாஸ்திரத்தின் ஒருபங்கில் தேறினவர்களா யிருந்தார்களென்பதற்குத் திருட்டாந்தங்களாயிருக்கின்றன. ஆகிலும் அவைகளைக்குறித்து கானான்தேசவிலாசத்தில்விவரித்துக்காட்டியிருக்கிறது, அங்ஙனங் கண்டுகொள்க.

யூதகோத்திரத்தில் பெத்சாலேயேல், தாண்கோத்திரத்தில் அகோலியாப் நப்தலிகோத்திரத்தில் ஈராம் இவர்கள் எபிரோயருக்குள்ளே தோன்றின சிற்பசாஸ்திரிகளிற் பேர்பெற்றவர்களாயிருந்தார்கள். விக்கிரகங்களை யுண்டாக்குவதைப் பராபரன் எபிரோயருக்கு விலக்கியிருந்தபடியினாலே சிற்பசாஸ்திரமுறையில் சொரூபங்களைச்செய்ய அவர்களுக்குத் தெரியாதிருந்தது. மேலுங் கமான்கள் வளைக்கத்தெரியாதிருந்ததென்றுந் தோன்றுகின்றது. (உ. மோசே. ௩௧, அதி. உ—௰௧. வா. க. இரா. எ, அதி. ௰௩—உ௨. வா. உ. மோசே. உ௰, அதி. ச. வா.)

பெரிய மாளிகைகளை மாத்திரமல்ல சிறிதான வாசஸ்தலங்களையும் செம்மையாய்க் கட்டுகிறதற்கு சிற்பசாஸ்திர அறிவு வேண்டுமே. ஆகையால்இனி எபிரோயருடையகூடாரம், வீடு, கிராமம், பட்டினம், இந்நான்கையும் பற்றித் தனித்தனியே இங்ஙனஞ் சில சொல்லுவோம்.

வாசஸ்தலங்களைக் கட்டும் வகையை மனிதர் அறியுமுன்னே வெயிலுக்கும் மழைக்குங் குளிருக்குந் தங்களைக் காக்கிறதற்குப் பெரிய மரங்களின் கீழும் மலைக்கெபிகளிலுந் தங்குவார்கள். அந்தப்படி தவறு மலைகளிலுள்ளகுடிகளுங்கல்லரபி மேய்ப்பர்களும் இந்நாள்வரைக்கும் அப்படிக்கெபிகளிலே வாசம்பண்ணி வருகிறார்கள். ஏசாவின் சந்ததியாராலே துரத்தப்பட்ட ஓரியரென்று சொல்லப்பட்டவர்கள் அப்படிக் கெபிகளிலே வாசம்பண்ணினார்களென்று நன்றாய்த் தோன்றுகின்றது. யுத்தத்தில் தோற்றுப்போனவர்களும் மலைகளுக்கு ஓடிக் கெபிகளைத் தேடி தங்களுக்கு அடைக்கலஸ்தலமாக்கிகொள்ளுவார்கள். (யோசு. ௰. அதி. ௰[illegible] வா. க. சாமு. ௰௩, அதி. ௬. வா. உ௨, அதி. க. ௨. வா.)

அங்கங்கே திரிந்தலைகிற பயணக்காரர் யுத்தசேனைகள் மேய்ப்பர் முதலியவர்களுக்குத் தங்குகிறதற்குத் தகுந்த மரங்களுங் கெபிகளும் எப்போதும் அகப்படாததாற் சலப்பிரளயத்துக்கு முன்னேதானே மனிதர் தங்களுக்கு வாசஸ்தலமாக வீடுகளுங் கூடாரங்களு முண்டுபண்ணத் தொடங்கினார்கள். (க. மோசே. ச, அதி. உ௰. வா.)

மிகுந்த பூர்வீகத்தில் தானே காயீனென்பவன் நோத்தேசத்திலே குடியேறி அவனும்அவன் சந்ததியாரும் ஆனோக்பட்டினத்தைக் கட்டினார்களென்று சொல்லியிருக்கின்றது. அதிலுள்ள வாசஸ்தலங்கள் கூடாரங்களல்ல வீடுகளாயிருந்தன. எப்படியென்றால் காயீனுக்குப் பின்பு நாலாந் தலைமுறையில் யாபேலென்பவன் முதலாவது கூடாரங்கள் உண்டு பண்ணினானென்று வேதசாட்சியினாலே யறிந்திருக்கிறோம். ஆகையாற் கூடாரங்கள்உண்டுபண்ணுமுன்னேவீடுகள்உண்டுபண்ணப்பட்டிருந்தனவென்று இதினாலே தெளிவாகிறது. ஆனோக் பட்டினத்திலுள்ளவீடுகள்சிறியவாயுஞ் சுவர்மண்ணினாலுங் கூரை இலையினாலுஞ் செய்திருக்கும். (க. மோசே. ச, அதி. ௰எ. ௰௬. உ௰. வா.)

எப்படியும் நோவாவென்பவன் ஒருபெரிய பேழையைக்கட்டினானே அதற்குச் சிலகாலத்துக்குப் பின்பு அவனுடைய சந்ததியார் பாபேலென்னும் பெரிய கோபுரத்தையும் பட்டினத்தையுங் கட்டினார்களே பேழை மரத்தினாலும்பாபேலென்னுங்கோபுரஞ்சுடுசெங்கலாலும்உண்டாக்கப்பட்டபடியினாலே மனுஷர்கள் அதிசீக்கிரமாய்ச் சிற்பசாஸ்திரமுறையிலும் அதற்கடுத்த எல்லாத் தொழில்களிலுந்தேறினவர்களானார்களென்று நன்றாய் விளங்குகின்றது.

பின்பு நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, இயாக்கோபு,என்பவர்கள் ஆடுமாடுகளுடையவர்களாய் அங்கங்கே திரிந்தலைந்தபடியினாலே கூடாரங்களிலே வாசம்பண்ணினார்கள். (க. மோசே. ௯, அதி. உக. வா. ௰௨, அதி. அ. வா. ௰௩, அதி. ரு. வா. உச, அதி. ௬எ. வா. உரு. அதி. ௨எ. வா.) அப்படியே எபிரோயர் எகிபதுத்தேசத்தை விட்டு வனாந்தரத்திலே யலைந்துதிரிந்தபோது கூடாரங்களில தங்கிவந்தார்கள் (ச. மோசே. க, அதி. ரு௨. வா. ௯, அதி. ௰எ. ௰அ. வா. உ௬, அதி. உ—ரு. வா. வரை.)

மேலும் அவர்கள் கானான்தேசத்திலே வீடுகள் கட்டிக் குடியேறின பின்பும் சூழ்ந்த தேசத்தாரோடே யுத்தம்பண்ணி வருகையிற் கூடாரங்களிலே தங்கிவந்தார்கள். சீரியர், பெலிஸ்தர், மீதியானர், இவர்களும் கானான்தேசத்துக்குச் சமீபமாயிருந்த மற்ற தேசத்தாரும் அப்படியேகூடாரங்களிலே தங்கிவந்தார்கள். (உ. சாமு. ௰க, அதி. ௰க. வா உ. இராசா. எ, அதி. ௯ எ. வா. க. சாமு. ௰[illegible], அதி. ரு௩. வா. நியாயா. ௯, அதி. ரு. வா.)

எபிரோயரில் தரித்திரரும் பொதுவான [illegible] வாசம்பண்ணின
கூடாரஞ் சிறிதாயிருந்தது அதில் நடுவிலவை சனங்க[illegible]று ஐந்து அல்ல,
து ஆறடித்தூரமாக ஆறு, ஏழ அடியுயுருமை ஒன்றுக்[illegible]ல்கள் நாட்டியி
ருககும் அந்தக்கால்களின்மேலே பே[illegible] தீது மான மூன்பின்மீதில் ஆட்டும
யிராற செய்யப்பட்ட விஸ்தாரமான க[illegible]ட்டிருந்த வத்து அக்கம்பளியி
னிரு அந்தங்களும் இரண்டு பக்கங்க[illegible] ஒரு கம்பளித்தமுளையிற் பெல
ணய்க்கட்டியிருக்கும் கூடாரத்திற்கு[illegible]ளிலும் அடித்திக்கிறதற்குப் பாய்க
ள்போட்டிருக்கும். [illegible]ள்ளே சனங்களி

ஐசுவரியவான்களுடைய கூடா[illegible]மோ விஸ்தாரமாட்டியிருக்கும் [illegible]ருக்கும் மத்தியில்
ஒரேவரிசையில் ஏழ அல்லது ஒன்பது கால்கள் நடும் ஒவ்வொன்று
ற்றுள் மத்தியிலிருந்த மூன்றுகால்களும் ஒரேயளவா[illegible]முகட்டின ஆகவு
ஒன்பது அல்லது பத்துஅடி யுயரமாயுமிருக்கும் கூடார[illegible]மற்றக் கால்கள்
யரம் அவ்வரிசையில் இருபக்கதத்திலும் நாட்டியிருந்த [illegible]சையினிருபக்க
ஒன்றுக்கொன்று தாழ்ந்தவைகளாயிருக்கும். மத்திவ[illegible]ன்றுக்குத் தாழ்ந்
த்திலும் மேற்சொல்லிய கால்களுக்கு நேராக ஒவ்வொ[illegible]ம். ஆகையால்
ததாய் இரண்டு மூன்று வரிசைக்கால்கள் நாட்டியிருக்[illegible]அல்லது ஒன்பது
ஒவ்வொரு பெரியகூடாரமும் வரிசை ஒன்றுக்கு ஏழ [illegible]தாயிருந்தது. அ
கால்களுள்ள ஐந்துஅல்லது ஏழவரிசையான காலுள்[illegible] அவற்றின்மே
ந்தக் கால்கள்மேலே சட்டமாசக் கயிறுபோட்டிருக்கு[illegible]ராலாவது செய்
லே துணியினாலாவது ஆட்டுமயிராலாது ஒட்டகமயி[illegible]ட்டமாக்ப் போட்
யப்பட்ட விஸ்தாரமான ஒரு போர்வையைவிரித்துச்ச[illegible]பும் [illegible]து. அந்தக் கூடா
டிருந்த கயிறுகளிற் சேர்த்துப் பெலனாகக் கட்டியிருந்த[illegible]ாகப் பிரிக்கப்பட்
ரத்தினுள்ளிடம் புடவைத்திரையினால் மூன்றுமறியல்[illegible] இஸ்திரிகளும் மற்
டிருக்கும். ஒருமறியலில் ஆண்பிள்ளைக[illegible]ள் ஒன்றில் [illegible]. வேலைக்காரருடை
றொன்றில்வேலைககாரரும் வாசம்பண்ணுவார்கள்
யு மறியலிலே கன்றுக்குட்டிகளையும் ஆட்டுக்குட்டிகளையுஞ் சிலவேளைகளில் அடைததிருப்பார்கள். மிகுந்த ஆஸ்திக்காரருடையகூடாரங்களி

ன் தளவரிசையில் பலவருணமும் அலங்காரமுமான கம்பளங்கள் விரித்திருக்கும். அங்கங்கே கூடாரங்களோடே யலைந்து திரிகிறவர்கள் அதிகச் சாமான் வைத்திருப்பார்களானல் வீண் பாரமாயிருக்கும் ஆகையால் எபிரோயர்சிலதவலையணைகள் சிப்பி, வெண்கலமானபாத்திரங்கள் இவை போல மிகவுந் தேவையான சிலவைகளை மாத்திரந் தங்கள் கூடாரங்களில் வைத்துக்கொள்ளுவார்கள்.

———o———

DIVINE ORIGIN OF THE CHRISTIAN REVELATION.

கிறிஸ்துமார்க்கஉதாரணங்கள்

[தொடர்ச்சி]

—o—

அவது விசேஷம்.

கிறிஸ்துவையும் மகம்மதுவையும், அவர்கள் காட்டினமார்க்கங்களையும் ஒத்துப்பார்க்கும்பொழுது மகம்மதுமார்க்கம் மனிதனுடைய உபாயத்தினுல் நூதனமாயுண்டானதென்றுங், கிறிஸ்துமார்க்கமோ தெய்வதிருவுளத்தினின்று தோன்றினதென்றும் விளங்கும்.

ஐரோப்பாக்கண்டத்தின் ஒரோருதிக்கிலும், ஆசியா, ஆப்பிரிக்காகண்டங்களின் பற்பலபங்குகளிலும், அனுசரிக்கப்பட்டுவரும் மகம்மது வேதமென்ற ஒருமதமுண்டு. இந்தமதத்தையேற்படுத்தின மகம்மதுஎன்றுபேர்கொண்டவன், பரன்பராபரனல் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியென்று சாதித்தும், ம[illegible] மார்க்கத்தாரல்லாதவர்களும், மகம்மதுவின்வாக்கையு[illegible] அகம்மது[illegible] சித்தவைகளையுங், கருத்தூற்றுக்கவனிததவர்களெல்ல[illegible]வன்உபதே[illegible]ள்ப்பிடித்தவனும் எத்தனுமாயிருந்தானென்றும், அவ[illegible] அவன், ம[illegible]ரனது அவன்தானே யோசித்துத்தீட்டின கட்டுவிளேகாட்டின மத[illegible]மானித்திருக்கிருர்கள். கிறிஸ்துமார்க்கத்தை யேற்று[illegible]ஷமென்றுந் தீர்[illegible]கள் முதலாய், மகம்மது மதத்தைச் சத்தியமென்று [illegible] கொள்ளாதவர்[illegible] அத்துவைதமத அனுசாரியெவனும் மகம்மதுமார்க்கஅங்கிகரியார்கள். [illegible] உணரவந்து அதைஅனுசரித்தானென்றும் நாம்த்தின் உண்மைமை[illegible]லை.

உலகத்தில்த்[illegible]கள்விப் படுவதுமி[illegible]ற்பலமதங்களில் கிறிஸ்துமார்க்கமும்மகம்மது மதமுநான்றியிருக்கும் ப[illegible]ன்றையொன்று விரோதீக்கிறதாயிருந்தும் அதினதி[illegible] கொள்கையிலே[illegible]றபடி, இரண்டும் முறைமுறையாய்க் கடவுளின் அனு[illegible]சிஷர்கள் சாதிக்கி[illegible]னதென்றுகும். கடவுள் ஒருவராயிருக்கிறதுபோல் [illegible]க்கிரகத்திணுலுண்[illegible]ளமும்ஒன்றே, ஒருவருக்குஇதுசத்தியமென்று அவர்திஅவருடைய திருவு[illegible]க, மற்றொருவருக்கு அதற்கெதிரிடையானது சத்தியருவுளம்பற்றியிருக்[illegible]லர்வது தம்துமாட்சிமையுள்ள இலட்சணங்களுக்கு [illegible]மன்று திருவாய[illegible]டுபண்ணுவதாகும். ஆதலால் இவ்விரண்டுமார்க்கங்களி[illegible]ன்னத்தையுண்[illegible]ருப்பது கூடாதகாரியமே, என்றுலும் எத்தனுக்குந் தி[illegible]ளுஞ் சத்தியமா[illegible]றவருக்குஞ், சத்தியத்திற்கும் அபத்தத்திற்கும் வித்தியாச[illegible]வ்விய அருள்பொ[illegible]த்தியாசம் பரிட்சையினுல் விளங்குவதினுலும், இவ்விர[illegible]மிருக்க, இவ்வி[illegible]ளயும், அவைகளை யேற்படுத்தினவர்களையுமொப்பிட்[illegible]ண்டுவேதங்க[illegible]ப் பார்ப்போம்.

மகம்[illegible]து.

மகம்மது தன்தேச[illegible] [illegible]பரிய அந்திஸ்துள்ளவ[illegible]யிருந்தில்[illegible]. மெக்காப்பட்டினத்தில் அதிகாரமுங் கனமும் பொருந்திய வமிசவரிசையிற் பிறந்தவனாயிருந்தான். பிறப்பினுல் ஆஸ்தி சீமானுயிராவிட்டாலும் விவாகசம்பந்தத்தினுலே ஸ்திதியுள்ளவனுனன். இப்பேர்ப்பட்டவன் ஏற்படுத்தின மார்க்கமானது, தெய்வ அருளன்றி ஸ்திரப்படுவது கூடாதகாரியமல்லவே. வாரியிறைக்கப் பொருளுள்ளவனுங், கட்டளைகற்பிக்க அதிபதியென்றுபேர் கொண்டவனும், தேசத்தின் பிரபுக்களுக கீனத்தானுயிருந்தவனும், அறிவும் நாகரீகமுமில்லாத காலத்தில்மனிதனை அறநெறியில் நடத்துங் குருவாக ஏற்பட, சிலசீஷர் அவனைநத்தினது ஆச்சரியமல்லவே.

மகம்மதுஎன்பவன் சிற்றின்பங்களுக்கிடங்கொடுத்தான். சிற்றின்பங்களைக்குறித்துத் தானே யேற்படுத்தின பிரமாணங்களை மீறினன். தனக்கிருந்த அதிகாரத்தை முன்னிட்டுத் தன் இச்சைகளை நிறைவேற்றவும், உல்லாசமாய்நடக்கவும் வகைதேடினன். தாராளமாய்க் காமவிகாரங் கொள்ளத் தனக்குமாத்திரஞ் சிலாக்கியமருளப்பட்டதென்று சாதிக்கவுந்துணிந்தான்.

மகம்மது கொடுமையனும் ஆங்[illegible]ரமுள்ளவனும் இரத்தப்பிரியனுமாயிருந்தான்.

மகம்மது பராபரன் தனக்கு இரகசியத்தில் காட்சியளித்து தன்னுடன் சம்பாஷித்தாரென்றும், தேவதூதனகிய காபிரியேல் தனக்குவெளிப்பட்டானென்றுஞ் சொன்னன். இவ்வித வெளிப்படுதலைக்கண்டாருமில்லை கேட்டாருமில்லை.

மகம்மது தோன்றுவதைக்குறித்துப் பூர்வ தீர்க்கதரிசனங்களிற் கண்டிராததுமன்றி, இப்பேர்ப்பட்டவன் உலகத்திலே தோன்றுவானென்று எதிர் பார்த்திருந்தாருமில்லை.

இயேசுக்கிறிஸ்து.

இயேசுக்கிறிஸ்துவானவர் அந்திஸ்து, திரவியம், அதிகாரம்முதலிய சலக்கருவணைகளை யுடையவராயிருக்கவில்லை. ஏழைகளினிடமாய்ப் பிறந்தவராயிருந்தார். அவருடைய உறவின்முறையார், சிநேகிதர் எல்லாரும் தாழ்ந்தோராயிருந்தார்கள். அவர்தரித்திரத்தைச்சகித்துத்தலையை சாய்க்கமுதலாய் இடமில்லாதவராயிருந்தார். இப்பேர்ப்பட்டவர், தம்முடையசுயஅதிகாரத்தைநாடி, ஓர் நூதனமானமார்க்கத்தையேற்படுத்தப் போந்தவரல்லவென்பதுபிரத்தியட்சமானகாரியம். ஓர்நூதனமான மார்க்கத்தை யேற்படுத்த இவரால் கூடியதாயிராவிட்டால் இப்பேர்ப்பட்டவர் பொய்மதத்தை ஸ்தாபிப்பது எவ்வளவுகடினமானகாரியம்.

இயேசுக்கிறிஸ்து வானவரோ மாசற்ற சிறந்த நடக்கையுள்ளவரும் முடிவுபரியந்தந் தம்முடைய கற்பைத் காத்தவருமாயிருந்தார். முற்றிலும் பரிசுத்தமுள்ளவருங் கறைப்[illegible]டாதவருமாயிருந்தார். அவர்பாவஞ் செய்ததேயில்லை. அவருடைய தி[illegible]யுக[illegible]கைளூர்முதலாய் அவரைக் கு[illegible] [illegible]சாட்டவும் அவருடைய நடக்[illegible]கயைக் குறித்துத் தீதுமொழி சொல்லவும் வகை காணமற் போனர்கள்.

கிறிஸ்துவானவரோ மெத்தனவுஞ், சாந்தமுந் [illegible]யவும், இரக்கமும் நிறைந்தவராயி[illegible]ந்தார்.

இயேசுவானவர் பராபரனுடைய குமாரனென்றும் பரமண்டலத்திலிருந்துண்டான சத்தங்களினுல் அடிக்கடிகூறப்பட்டதுமன்றி, இவ்வித சாட்சியருளப்பட்டது பிறராலுஞ் சத்தமாய்க் கேள்க்கப்பட்டுத்தெளிவாய் எழுதப்பட்டுமிருக்கிறது.

கிறிஸ்துவானவர் தரணியில்த் தோன்றுவதை அநேகதீர்க்கதரிசிகள் தெளிவாயும், அடிக்கடியும், முன்னறிவித்ததுமன்றி, அந்தத்தீர்க்கதரிசனங்கள் அவர்தோன்றின பின்பு அவரையே பற்றும்பொருள்களாய் வெளிப்பட்டன. அவருடைய வருகையை முன் கூறின

[ருசும்ஏட்டைப்பார்]

ஆனிமீ ௰௮௨ முதல் ஆடிமீ ௰௬௨ வரைக்கும்.

வாரம்.	சாதி தேதி.	தமிழ் தேதி.	விசேஷித்த நாட்கள்.
தி	1	௰௮	... ...
செ	2	௰௯	... ...
பு	3	௨௰	... ...
வி	4	௨௧	... ...
வெ	5	௨௨	... ...
ச	6	௨௩	... ...
ஞா	7	௨௪	திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு.
தி	8	௨௫	... ...
செ	9	௨௬	அமாவாசியை மாலைமணி ௭. மினிற்று ௩௫.
பு	10	௨௭	சந்திரமந்தோச்சம் காலைமணி ௮.
வி	11	௨௮	... ...
வெ	12	௨௯	... ...
ச	13	௩௰	... ...
ஞா	14	௩௧	திரித்துவத்தின் பண்டிகைக்குப்பின்வரும் ஏழாம் ஞாயிறு.
தி	15	௩௨	... ...
செ	16	௧	... ...
பு	17	௨	... ...
வி	18	௩	... ...
வெ	19	௪	... ...
ச	20	௫	... ...
ஞா	21	௬	திரித்துவத்தின்பண்டிகைக்குப்பின்வரும் எட்டாம் ஞாயிறு.
தி	22	௭	... ...
செ	23	௮	... ...
பு	24	௯	பௌரணமி காலைமணி ௰. மினிற்று ௩௨. சந்திரதுங்கமந்தோச்சம் [மாலை மணி ௩
வி	25	௰	பரி. யாக்கோபு.
வெ	26	௰௧	... ...
ச	27	௰௨	... ...
ஞா	28	௰௩	திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்வரும். ஒன்பதாம் ஞாயிறு.
தீ	29	௰௪	... ...
செ	30	௰௫	... ...
பு	31	௰௬	... ...

அன்றுடகத்தியானம்.

உன் பராபரனாகிய கர்த்தர் மனவுருக்கமுள்ளதேவனானவர். ௫. மோசே. ௪. ௩௧.
உன் பாவங்களை நினையாமலுமிருப்போம். ஏசா. ௪௩. ௨௫. [௰௪. ௧.
அன்பையே அதிகமாய்த்தொடருங்கள். ஆவிக்குரியவரங்களையுந் தேடுங்கள். ௧. கொரி.
சுத்த இருதயமுள்ளவர்கள் பராபரனைத்தரிசிப்பார்கள் ஆகையால் அவர்கள் பாக்கியவா [ன்கள். மத்தே. ௫. ௮.
நான் இரட்சிக்கப்பட்டு எக்காலமும் உமதுபிரமாணங்களின்பேரில் மனமகிழ்ச்சியாயிருக் [கும்படி என்னையாதரியும். சங்கீ. ௱௰௯. ௱௰௭.
இஸ்ரவேலோ அறிவில்லாமலும், நம்முடையசனம் உணர்வில்லாமலுமிருக்கிறது. ஏசா. [௧. ௩.
என்னில் நிலைத்திருங்கள். நானும் உங்களில் நிலைத்திருப்பேன். யோவான். ௰௫. ௪.
ங்கள் பராபரனுடையகிருபையை வீணாய்ப்பெறாதபடிக்குப் புத்திசொல்லுகிறேன். ௨. கொரி, ௬. ௨.
பூமியிலே நான் பரதேசி; உம்முடைய கற்பனைகளை யெனக்கு மறைக்காதேயும். சங்கீ
அவர்கள் இருதயம் அவர்களுக்கிச்சக்கம்பேசுகிறது ஓசேயா. ௰. ௨. [௱௰௯. ௰௯.
மனத்தாழ்மையை அணிந்துகொள்வீர்களாக. ௧. பேது. ௫. ௫. [கள். ஏசா. ௪௫. ௨௨.
பூமியின் எல்லா எல்லைகளே, நம்மைநேரிட்டுநோக்குங்கள். அப்போதிரட்சிக்கப்படுவீர்
பராபரனுடைய சமாதானம் உங்களிருதயங்களுக்குள்ளே ஆளுகைசெய்யக்கடவது. கொ [லோ. ௩. ௰௫.
அவன் எவ்வளவாகிலுஞ்சந்தேகப்படாமல் விசுவாசத்தோடேகேட்கக்கடவன். யாக்கோ. [௧. ௬.
எச்சரிக்கையாயிருந்து உன் ஆத்துமத்தை மிகவுங் காவல்பண்ணு. ௫. மோசே. ௪. ௯.
ரித்திரராகிய நீங்கள் பராபரனுடையஇராச்சியத்தையுடையவர்களாகையால், நீங்கள்பா [க்கியவான்கள். லூக்கா. ௬. ௨௰.
ங்கள் ஒன்றையுங்குறித்துக்கவலைப்படாதிருங்கள். பிலிப்பி. ௪. ௬. [௰௬. ௨௪.
என்னைப்பின்பற்றிநடக்க ஒருவன் விரும்பினால் தன்னைத்தான் வெறுக்கக்கடவன். மத்தே.
ர்த்தர் தமது சனத்துக்குப்பலன்கொடுப்பார், தமது சனத்தைச்சமாதானந்தந்துஆசீர்வதி
ன்னும் இழப்பாரென்று அவரைநம்பியிருக்கிறோம். ௨. கொரி. ௧. ௰. [ப்பார். சங். ௨௯. ௰௧.
ர்த்தருக்கு நான்காத்து அவருக்கெதிர்பார்த்திருப்பேன். ஏசா. ௮. ௰௭. [௰௫.
ஞானமுள்ளவர்களைப்போலவே எச்சரிக்கையாய் நடந்துகொள்ளுங்கள். எபேசர். ௫.
னே உன்விசுவாசம் ஒழிந்துபோகாதபடி உனக்காகவேண்டிக்கொண்டேன். லூக்கா. [௨௨. ௩௨.
ர்சாகாதபடிக்குக்கர்த்தர்உமமுடையபாவத்தைநீங்கவும்பண்ணினார். ௨. சாமு. ௰௨. ௰௩.
ங்களைத்தொடுகிறவன் அவருடைய கண்விழியைத்தொடுகிறான். சகரி. ௨. ௮.
வரை நீங்கள் காணமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள். ௧. பேது. ௧. ௮.
ங்கள் ஓய்ந்திருந்து நாம் பராபரனென்றறியுங்கள். சங்கீ. ௪௬. ௰.
ங்கள் பராபரனுக்கும்உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்யமாட்டீர்கள். மத்தே. ௬. ௨௪.
பராபரனாகிய கர்த்தர் சூரியனுங் கேடயமுமானவர். சங்கீ. ௮. ௪. ௰௧.
ங்களிலுள்ள சாந்தகுணம் எல்லாச்சனங்களுக்குந் தெரியவரக்கடவது. பிலிப்பி. ௪. ௫.
ன்றியறிதலுள்ளவர்களாயிருப்பீர்களாக. கொலோ. ௩. ௰௫.

தீர்க்கதரிசனங்களடங்கிய ஆகமங்களும், அவரையும் அவர் நாட்டினவேதத்தையும் விரோதித்தவர்களின்வசமாய்ப் பத்திரப்பட்டிருந்தன. அவர்தோன்றின நாள்க்களில் விசேஷித்தவர் ஒருவர் தம்மை லோகத்துக்குவெளிப்படுத்தப் போகிறாரென்று கிழக்கிலுள்ளோரெல்லாருமெதிர்பார்த்திருந்தார்கள்.

மகம்மது தீர்க்கதரிசனமுறைத்ததேயில்லை. இதற்கென்று அருளப்பெற்றிருந்த தான் யாதொருகாரியத்தை முன்னறிவித்தும் அதுசம்பவிக்காமல்ப் போகுமிடத்தில், தன் கீர்த்திக்கும் நாணயத்திற்கும் குறைச்சலுண்டாகுமென்று ஏர்க்கனவே கருதி மவுனமாயிருந்தான்.

கிறிஸ்துவானவரோ அநேககாரியங்களை முன்னறிவித்ததுமன்றி, அவைகள் அவருடைய வாக்கின்படி நிறைவேறினதுமுண்டு. அவர் தம்முடைய மரணம் உயிர்த்தெழுதலைக் குறித்தும், எருசலேமின் அழிவைக்குறித்தும் பகர்ந்த தீர்க்கதரிசனங்களைககாண்க.

மகம்மது அற்புதங்களைச்செய்ய ஏற்படாமற்போனதுமன்றி, அவைகளைச் செய்வதற்கா[illegible] வல்லமை தனக்கருளப்ப[illegible]ில்லையென்றுஅறிக்கையிட்டுக் கடவுள் தன்னை யிவ்விதமாய் நடத்துவதற்குப் பல[illegible] [illegible]காந்தரங்களையும், [illegible] [illegible]ளையும் எடுத்துரைத்தான்.

இயேசுககிறிஸ்து வானவரோ பட்டப்பகலிலும், திரள்கும்புஉற்றுப்பார்த்திருககவும், அநேக நிகரற்ற அற்புதங்களைச் செய்தாரொன்று யாவருககுந் தெரிந்திருககலாம். செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும், சப்பாணிகள் நடக்கவும், குருடர் பார்வையடையவும், மரித்தோர் உயிர்த்தெழுந்திருககவுங் கட்டளையிட்டார்.

மகம்மது தான் நூதனமான மார்க்கத்தை ஏற்படுத்தத்துடங்கின (யஉ) வருஷம்வரைககும் உதாரணங்களை யெடுத்துரைப்பதிலும்; வேறு சதுமயத்தாரைத் தன்மார்க்கத்தை[illegible] யமையச்செய்ய வகைதேடினபொழுது, சொஞ்சப்பேர்மாத்திரம் அவனுக்குச்சீஷரானார்கள். மூன்றுவருஷத்தில்(யச) சீஷரையும், ஏழுவருஷத்தில்(அரு) புருஷரையும், தன் மார்க்கத்தை யமையப்பண்ணினான்.

இயேசுக்கிறிஸ்துவானவரும்அவருடைய அப்போஸ்தலரானவர்களும் ஏறக்குறைய அவ்வளவுகாலத்தில் ஆயிரங்களும்பதினாயிரங்களுமான சீஷரைச்சேர்த்ததுமன்றி, ஆசியாக்கண்டத்தின் அநேகதேசங்களில்க் கிறிஸ்துமார்க்கத்தைநாட்டி, வளர்ந்தோங்கவுஞ்செய்தார்கள்.

மகம்மதானவன் தங்கள் முற்பிதாக்களாகிய ஆபிரகாமும், இஸ்மவேலும், மோசேயும், இயேசுவானவரும் உபதேசித்த வேதத்தையே தானும் பரிபாலனம்பண்ணப் பிரயாசப்படுவதாக யூதருக்குங் கிறிஸ்தவர்களுக்கும் அராபியருக்குஞ்சொன்னான். இதினால் பிறர் தான்பிரசங்கித்த மார்க்கத்தை விரோதிக்காமல் அனுசரிக்க ஏதுகரமுண்டாயிருந்தது.

கிறிஸ்துவானவரோ யூதருடைய பாரம்பரைக்கொள்கைகளுக்கு விரோதமாய் உபதேசம்பண்ணி, விக்கிரகபத்தியையும், மற்றுமுண்டாகிய சகல அவபத்தியையும, நிற்கிரகம்பண்ண ஊக்கமுடன்வயிராக்கியம் பாராட்டினார்.

மகம்மது தன்னுடைய சீஷர் உல்லாசமாயிருக்கவுந் தங்கள் இச்சைகளுக் கிடங்கொடுக்கவுஞ் சம்மதித்தான். உஷ்டணமான தேசத்தில் வாசம்பண்ணுகிறவர்களுடைய குணங்கள் மூர்க்கமும் முமுற்முமுள்ளதா யிருக்குமென்றறிந்து, மாமிச இச்சைகளை நிறைவேற்றத் தாராளமாய் உத்தரவு கொடுத்தான். ஒவ்வொருவன் நாலுபெண்களைப் படைக்கலாமென்றுந் தன் மனவிகளைமூன்றுதரங் கழித்துவிடலாமென்றும்ஏற்படுத்தினான்.

இயேசுக்கிறிஸ்து வானவரோ, அந்த உஷ்ட்ண பூமியான தேசங்களிலுஞ், சிற்றின்பங்களிற் பிரியப்பட்டவர்கள் நடுவிலும் வாசம்பண்ணியுந் தமமைப் பின்பற்றினவர்கள் விபசாரத்தையுஞ் சோரமார்க்கத்தையுஞ் சகலவித அசுத்தத்தையும் வெறுத்திருக்கவேண்டுமென்று கண்டிப்பாய்க் கற்பித்தார். ஒவ்வொருவனும், ஒருபெண்சாதியை மாத்திரம் படைக்கவேண்டுமென்றும், விபசாரத்திற்கொழிய மற்றெந்தக் குற்றத்திற்காகவும் அவளைத்தள்ளிவிடக்கூடாதென்றுங் கட்டளையிட்டார். இதிலுமதிகமாக, தமக்குச் சீஷரானவர்கள் தங்கள் கண்களைக் காத்துத் தீமையின் தோற்றத்திற்கெச்சரிக்கையாயிருந்து, இச்சையுள்ள சிந்தனை உள்ளத்தில்ப் பிறந்தஉடனே அதை மறுக்கவேண்டுமென்றுந்திருவுளம்பற்றினார். ஒருவன் காமவிகாரமாய்ஒருஸ்திரியை இச்சித்தால், அவளோடு விபசாரம்பண்ணின[illegible]றாய் நிருணயிக்கப்படுவானென்றும், "இருதயத்தில்ச் சுத்தமானவ[illegible]மாத்திரம் பராபரனைத் தரிசிப்[illegible]" ளெனறுந்திருவாய் மலர்ந்த[illegible] அவர் சகல விதக் கேட்[illegible] கடிந்துகொண்டு, தம்முடை[illegible] மார்க்கத்தை யமைந்த அனைவருந் தங்களைநெருக்கும்பாவத்தைத் தாங்கள்கடந்துநிற்கும்பொருட்டு, எவ்விதத்தடைகள் நேரிட்டாலும் அவைகளை யெல்லாம் மேற்கொண்டு, தாய் தகப்பனையு[illegible]றவின்முறையாரையும் நிலப[illegible]களையும் எல்லாம் விட்டு விட்டுத் தம்முடைய சிலுவையைச் சுமந்து தம்மைப்பின்பற்ற வேண்டுமென்று உபதேசித்தார்.

மகம்மதுமனிதரைநயந்துகொண்டு தன்மார்க்கத்தைப் பரிபாலனம்பண்ணும்பொருட்டுத் தன்னைப்பின்பற்றினவர்களுக்கு மறுமையிலும் உல்லாச இன்பங்கள் கட்டளையிடப்படுமென்றும், ஒவ்வொருவனும் அதிக சவுந்திரியமும் வாலிபமுமான அநேக இஸ்திரிகளை மறுமையில்படைப்பானென்றுஞ் சொல்லத்துணிந்தான்.

கிறிஸ்துவானவரோ மறுமையில்இவ்விதஉல்லாசங்கள்கிடைக்குமென்று வசனியாமலிருந்ததுமன்றி, மோட்சவாசிகள் விவாகம்பண்ணுவதும், விவாகத்தில்க்கொடுப்பதுமில்லையென்றுஉரைத்து, அங்கேசேருபவர்களுக்கு கண் காணததுங் காதுகேளாததும், அறிவதற்கதீதமானதுமாகிய பாக்கியங்களை வாக்குத்தத்தம்பண்ணினார்.

கிறிஸ்துமார்க்கம் இந்துதேசததில் பிரபலலி யமானதைக்குறிததுச்சோலலியது.

—o—

[தொடர்ச்சி.]

துளாஅயம்) வருஷத்திலே மைசூர்நாட்டிலிருந்து ஐதாரலிஎன்பவன்
பலத்த படையோடே புறப்பட்டுவந்து கர்ணுடகமெங்கும் விசேஷமாக
ச்சென்னபட்டினத்திலுங் கொடிய கலககத்தை யுண்டாக்கினன்.
இரண்டுவருஷங்களுக்குப் பிற்பாடு பிரைத்தோப்பட் ஐயரவர்கள் மரித்
துப்போக பெப்ரோசியுஸ் ஐயரவர்கள் ஒண்டியாக வேலைபார்த்து வரு
கிறதற்கு ஏதுவாயிற்று. இப்படி யவர் விருத்தாப்பியமுள்ளவராய் மிசி
யோன்காரியங்களை நடப்பித்துவர க்கூட இருந்த (Gericke) கேரிக் ஐய
ரவர்கள் அவருக்கு உதவியாக சென்னபட்டினத்திற் சேர்ந்து (துளா
அஅம்) வருஷம் ஆகஸ்துமீ. உகூவயிலே மிசியோன் விசாரணையெல்
லாம் ஒப்புக்கொண்டார். சிலகாலத்திற்குப் பிற்பாடு பெப்ரோசியுஸ்
ஐயரவர்கள் மரித்துப்போனுர்.

கேரிக்ஐயரவர்கள் காஞ்சிபுரம் வேலூர் பழவேற்காடு முதலான இட
ங்களுக்குப்போய் அவ்விடங்களிலுள்ள கிறிஸ்தவர்களைக்கண்டு அவர்
களுடைய நிலைமைக்கு ஏற்றபுத்திமதிகளையுஞ் சொன்னுர். அஞ்ஞா
னிகளுக்குங் கிறிஸ்துமார்க்கத்தைத் தாராள்மாய்த் தெரியப்படுத்தினுர்.
வேலூருக்குப் போயிருந்தபொழுது (ஈரு) வயசுள்ள ஒரு பணடாரத்துக்
கும் ஞானஸ்நானங்கொடுத்தார். இவன் சிலகாலமாய்வேதத்தைஉண்
மையோடேபடித்து வந்து தனக்கு ஞானஸ்நானங் கொடுக்கவேண்டு
மென்று மிகுந்த ஆசையாகக் கேட்டான். அப்படியேயவன் உண்மை
யுள்ளவனென்று ... ஞானஸ்நானங்கொடுத்தார். அவன் கிறிஸ்து
மார்க்க ஒழுங்கு கற்றபடி நடந்து சிலகாலத்துக்குப் பிற்பாடு நன்னம்
பிக்கையுள்ள க மரித்தான்.

துளாசகூம்)தாருஷத்திலே (Pæzold) பேசோல்து ஐயரவர்கள் சீர்மை
யிலிருந்து சென்ன பட்டினத்திற்குவந்து சேர்ந்தார். சுவாட்ஸ்ஐயரவர்கள்
அவரைத் தம்மிடத்தில் ஒருவருஷமாக வைத்துக்கொண்டு தமிழை
ப்படித்துக்கொடுத்து மறுவருஷத்தில் வேப்பேரிக்குத்திரும்ப அனுப்பி
னுர். (துளாஅஎம்)வருஷமுதல்(துளாகூகூம்)வருஷமவரையும் சென்ன
பட்டினத்துச் சேகரத்தில் சபையையைப் புதிதாகச் சேர்ந்தவர்கள் (எா
எக) பேராம். கேரிக் ஐயரவர்கள் சுகத்தாழ்ச்சியும் பலவீனமு முள்ள
வராயிருந்தும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டு பலஇடங்களு
க்குப் பிரயாணுய்ப் போயிருந்ததில் (துஅாகூம்) வருஷத்திலே வேலூ
ருக்குப்போய் அதிகமாக வியாதிப்பட்டு (சுக) வயதுள்ளவராய் மரித்தார்.
இவர் தமக்குள்ளதெல்லாம் தமக்குச்சொந்தமாகப்பாவித்துக்கொள்ளா
மல், சகலதுங் கருத்தருடையதென்றுசொல்லி மரணசாதகத்திலே
மிசியோனுக்கு (யருது)வராகன் தானமாக எழுதிக்கொடுத்தார்.

இவர்சாகிறதற்குமுன் பேசோல்துஐயரவர்கள் கல்குத்தாவுக்குப்போய்
அவ்விடத்திலுள்ள கல்விச்சாலையில்ப் படிப்பித்துக் கொண்டிருந்தார்.
ஆனதால் சென்னபட்டினத்து மிசியோனை விசாரிக்கும்படியாக, தரங்
கன்பாடியிலிருந்து (Rottler) ரொட்லரையரவர்கள்நியமிக்கப்பட்டா
ர். (துளாகூஎ) ம் வருஷமுதல் (துஅாகூம்) வருஷம்வரையும் அவ்வி
டத்திலே கிறிஸ்துமார்க்கத்தைப் புதிதாகச் சேர்ந்து ஞானஸ்நானம்
பெற்றவர்கள் (கூாஎஉ) பேராம். இதுவுமல்லாமலும் அவ்விடத்துச்
சபையாருக்குள் இராப்போசனத்தைச் சேர்ந்தவர்கள் (ஈஎகூ) பேராம்.
இவ்விதமாய் இதுவரையும் அவடத்திலே மிசியோன் ஸ்தாபிக்கப்
பட்டது முதல் உத்தேசம் (ருது) பேர் கிறிஸ்துமார்க்க உபதேசத்தைக்

கேட்டுப் படித்து ஞானஸ்நானம் பெற்றதுமல்லாமல் பற்பல இடங்களி
ல் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து அநேகம் பிள்ளைகள் கிறிஸ்துமார்க்
கத்தைக்குறித்துப் படிப்பிக்கப்பட்டார்கள். இவ்விடத்தில் சென்னபட்
டினத்து மிசியோன் சங்கதிகளை நிறுத்தி

திருச்சிராப்பள்ளியில

கிறிஸ்துமார்க்கம் பிரபல்லியமானதைக்குறித்துச் சொல்லுகிறோம்.

ஐயன்மார்கள் இன்னின்ன இடங்களிலே மிசியோனைஸ்தாபிக்க
வேண்டுமென்றுமுன்னதியாய்த்தானே தீர்மானம்பண்ணுமல் அவர்கள்
பிரயாணமாய்ப்பற்பலஇடங்களுக்குப் போய்ப்பிரசங்கித்ததில் எவ்விடத்
தில் அதுபலன் கொண்டதோ அந்தயிடத்தில்அது நிலைப் படுத்தும்படி
யாய்த் தங்களால்க்கூடிய பிரயத்தனங்களைச் செய்தார்கள். (துளா
ருஎ) ம் வருஷத்திலே திருச்சிராப்பள்ளிக்கடுத்த சீரங்கத்திலே பிரான்
ஸ்க்காரருடைய சேவகத்திலே இருந்த ஒரு பட்டாளததுத்துரை வியாதி
ப்பட்டுக்கிடக்கத் தரங்கன்பாடியிலுள்ள கோலோப் ஐயரவர்கள் தம்
மைக் கண்டுகொள்ளவரவேண்டுமென்று கேட்டனுப்பினுர். அந்தப்
படியவர்வந்து சிலநாளாய்க் கூடயிருந்தபொழுது அந்தயிடத்துக்குச்சமீப
மான பேர்போனகோவிலைச சேர்ந்த பிராம்ணரோடே தாராளமாய்ப்
பேசி, சம்பாஷிக்கிறதற்கு இடமுண்டாயிருந்தது. மேலும் கொஞ்சத்தூர
த்துக்குள்ளிருந்த திருச்சிராப்பள்ளிக்கோட்டை இங்கிலீஷக்காரர்வசத்
திலிருந்தபடியால் இவர் அவ்விடத்திற்குப்போய் சனங்களுக்கு நல்வழி
காட்டவும் பட்டாளத்துத் துரைமுதலானவர்களுக்கு பிரசங்கம்பண்ண
வும் சமையங்கிடைத்தது. இதையிட்டு அவர் தரங்கன்பாடிக்குத் திரு
ம்பினபிற்பாடும் அவரும், மற்றஐயன்மார்களும் ஒருவேளாவேளை அந்த
இடத்திற்குப்போகவும் வரவும் ஏதுவுண்டாயிற்று. பிற்பாடு (துளா
சுஉ) ம் வருஷத்திலே சுவாட்ஸ்ஐயரவர்களும் அவ்விடத்திறகுப்போய்
அவ்விடத்திலுளள துரைகளுடைய உதவியினுலே ஒருசெபவீட்டைக்
கட்டி, சிலமாசங் கடந்தபின் அஞ்ஞானத்தைத்தள்ளிப்போட்ட சிலரு
க்கு ஞானஸ்நானங்கொடுத்து அவர்களையும் பாப்புமார்க்கத்தை வெ
றுத்த சிலரையுஞ் சபையில்ச்சேர்த்துக கொண்டார்.

துளாகூரு) ம் வருஷத்திலே கோட்டைக்குள்; கிடங்குகளில்வைத்
திருந்தவெடிமருந்து தீப்பட்டுவெடித்து வெகுசேதமுண்டாக்கிற்று. அதில்
(யஅ) பேர் மரித்தார்கள். மறுவருஷத்திலே மதுரைக்கோட்டையைப்
பிடிககும்படியாய் உத்தரவுவந்ததினுல் திருச்சிராப்பள்ளியிலிருந்துபோன
படையோடே சுவாட்ஸ் ஐயரவர்களும் கூடவரவேண்டுமென்றுகேட்க
அவருஞ்சம்மதித்துப் படையோடேகூடபபோய் வியாதியுள்ளவர்களுக்
குங் காயபபட்டவர்களுக்கும் ஆறுதல்சொல்லி உதவிசெயது ஓய்வுநாளி
லே தேவாராதனைநடத்தினுர் மதுரையில்த் தலைவனுயிருந்தவன்பராக்
கிரமமாய்ப் போர்காட்டி அந்தஇடம் இங்கிலிஷக்காரர்கையில் விழாத
படிக்குத் தன்னுல்க்கூடிய பிரயத்தனங்களை யெல்லாஞ் செய்தான்.
ஆனுலும் அவன்சனத்தாரில் ஒருவன்தான் அவனை இங்கிலிஷ்க்காரர்
கையில்க் காட்டிக் கொடுக்க, கோட்டை சீக்கிரத்தில்ப் பிடிபட்டது.
சிலகாலஞ்சென்றபிற்பாடு சுவாட்ஸ்ஐயரவர்கள்தாம்தரங்கன்பாடியில்
ப்போய் அலுவல்பார்க்கவேண்டுமென்று யோசித்திருக்க, மற்றஐயன்
மார்கள் பதில்ஒருஐயர் சீர்மையிலிருந்துவருகிறவரையும் அவர்திருச்சிரா
ப்பள்ளியிலே இருக்கிறது உத்தமமென்றுசொல்ல, அவர்அதற்குச்சம்ம
தித்து அவ்விடத்திலே பட்டாளத்துத் துரைகள்முதலானவர்களுடைய
உதவியினுலே கோட்டைக்குள்ளே (துருா) பேர் அடங்கத்தக்கதாக
ஒருபெரியகோவிலைக் கட்டத்தொடங்கி (துளாகூகூ) ம் வருஷம் மேய்
மீ யஅஉ யாகிய பரிசுத்த ஆவியின்பண்டிகைநாளிலே அதைபபிரதிஷ
டைசெய்து காலையில் இங்கிலீசிலும் மத்தியானத்தில்த் தமிழிலும் மா

லையில போர்த்துக்கீசிலும் தேவாராதனையைநடத்திப் பிரசங்கம்பண்
ணினூர்
சுவாட்ஸ்ஐயரவர்கள் (சூளாசுஅ) ம் வருஷத்தில் கும்பகோணத்துக்
குப்போய் அவ்விடத்தில்த் திருவிளாவுக்கு வருகிறவர்களோடே கிறிஸ்
துமார்க்கத்தைக்குறித்து சம்பாஷித்து வந்தார். இப்படியே அடிக்கடி
பலஇடங்களுக்கும்போய்ச் சனங்களோடே தாராளமாய்ப் பேசுவார்.
ஒரு நாள் ஒரு பண்டாரம் அவரிடதத்தில் வந்து ஐயா இப்போது ஏழுவ
ருஷக்காலமாய என்பாவம் நீங்கவேண்டுமென்று பேர்போன இடங்க
ளுக்கெல்லாம்போய்த் தரிசித்திருக்கிறேன். இன்னம் மனதுக்குச்சமா
தானம் உண்டாகவில்லை. இதைப்பற்றி எனக்குண்டாயிருக்கிறகலக்கத்
தைப் பாப்புமார்க்கத்தானுகிய ஒருவனிடத்தில்ச் சொன்னதற்கு அவ
ன் எனக்கு வெஙகலத்தாற்செய்யப்பட்ட ஒரு சிலுவையைக்கொடுத்
தான். நான் போகிறஇடத்துக்கெல்லாம் அதைக்கூடவே கொண்டு
போகிறேன். சிலவேளை அதை முன்னுக்குவைத்துக்கொண்டு பூசை
யுஞ்செய்கிறேன். இன்றுகாலையில் நான் ஆற்றங்கரையில்நின்றுகொ
ண்டு சீரங்கத்துக்கோவில்களையுங் கோபுரங்களையும்பார்த்து இதெல்
லாம் என்னத்துக்காகுமென்று மனதில் நினைத்துநிற்க, தங்களுடைய
உபதேசியார் என்னிடத்தில்வந்து கிறிஸ்துமார்க்கத்தைக்குறித்துப் பலநி
யாயங்களைச்சொல்லியிருக்கிறுர். ஆனதால் இந்தஉபதேசத்தை நான்
நன்ருகக்கேட்கவேண்டுமென்றிருக்கிறேன். விக்கிரகமார்க்கத்தில் இல்
லாத நல்விசேஷம் இதிற்காணப்படுமேயாகில், சந்தோஷத்தோடே அ
ங்கிகரித்துக்கொள்ளவேண்டுமென்றுன். ஐயரவர்கள் அவனைச்சிலநா
ளைக்குத்தம்மிடத்தில்த்தாராளமாய்வரவும்கிறிஸ்துமார்க்கத்தைக குறித்
துதிட்டமாய்விசாரிக்கவும் விசாரித்தறிந்தபின்தீர்மானம்பண்ணலாமெ
ன்றுசொனனப[illegible] அவன் நாள்தோறும் ஐயர் வீட்டுக்குப்போய் வேதநி
யாயங்களைக்கே[illegible]டு மனந்தெளிந்து, தான் உடுத்தியிருந்தகாவிவஸ்திர
த்தையும் உருத்[illegible]ாட்சத்தையும் தள்ளிப்போட்டு, சிலகாலங்கடந்த
பின் ஞானஸ்ந[illegible]ம் பெற்று ஞானப்பிரகாசமென்று பேரைக்கொண்
டான். மேலு[illegible]அவன் சிறுவயதில்ப்படித்திருந்தவாசிப்பு அப்பியாசமி
ல்லாமல் மற[illegible]ாய்ப்போயிருந்தபடியினுலே நன்ருகவாசிப்புங் கணக்
கும்படித்து வே[illegible]அறிவிலுந்தேறி தேவபத்தியோடு நடந்துவரக் கடைசி
யிலே உபதேசியாயிருக்கும்படி நியமிக்கப்பட்டான்.

பிரசங்[illegible]க்குறிப்பு.

தீத்து. உ. யக, யஉ.

மனிதர் கேடுள்ள மனதையுடையவர்களென்று எக்காலத்திலேயு
மிருந்தசிந்தையுள்ளவர்கள் அறிந்து ஒப்புக்கொண்டார்கள். அதைநீக்
குகிறவகைமாத்திரம் அறியாதிருந்தார்கள். வியாதியுண்டென்றுஉணர்ந்
தார்கள். அவிழ்தமின்னதென்று அறியவில்லை. பராபரன் தாமே
தம்முடைய ஏகசுதனையனுப்பி, அவராலே அந்தக்கேடுநீங்கும்படி
வகையுண்டாக்கினுர். அந்தவகை சுவிசேஷத்தினுலே தெளிவாகக்கா
ட்டப்பட்டிருக்கின்றது. அந்தச்சுவிசேஷத்தைக்குறித்து வாக்கியததி
லேசொல்லிய விசேஷங்களாவன.

I அது தேவ்கிருபையாயிருக்கிறதென்றும்-
II அது இரட்சிப்பைக்கொடுக்கிறதென்றும்-
III அது எல்லாவிதமான மனிதருக்கும் பிரசன்னமாயிற்றென்றும்
IV இவ்வுலகத்திலே பரிசுத்தமுள்ளவர்களாய்ச் சீவனம்பண்ணும்
படிக்குப் போதிக்கின்றதென்றுமாம்.

1 சுவிசேஷந் தேவகிருபையாயிருக்கிறது. வேதத்திலே **கிருபை** யென்றவார்த்தை பராபரன்மனிதர்பேரில்த்தம்முடைய திருவுள்ளத்தில்க்கொண்ட சுயாதீனதயையையும் இரக்கத்தையும் உணர்த்துகிறதுமல்லாமல் சில இடங்களில் அவர் நமக்குத்தயவாகச்செய்துகொடுக்கிற ஈவுகளுக்கும் வரங்களுக்கும் பேராம். இவ்வாக்கியத்தில் இதுவே கருத்து. அவர் நமக்குக்கொடுத்தசுவிசேஷத்தையுணர்த்துகின்றது.

சுவிசேஷமானது தேவகிருபையென்று சொல்லுகிறதற்குக்காரணங்களாவன.

1. அது அவர் கிருபையாய்க்கொடுத்த ஈவாம்.

2 பாவிகளைக்குறித்து அவர் திருவுளத்தில்க்கொண்டதயையையும் அன்பையும் வெளிப்படுத்துகிறதாம்.

3. அவர் தம்முடைய கிருபையை மனிதருக்கு அருளும்படியாய் இது கருவியாயுமிருக்கிறதாம்.

II சுவிசேஷம் இரட்சிப்பைக்கொடுக்கிறதாயிருக்கிறது. இதுதான் அதினுடைய முக்கியமானநோக்கம். மனிதர் இருக்கிறபாவநிலைமையையும் அந்தநிலைமையினுலே அவர்கள் நரகத்துக்கு ஏதுவானவர்களென்பதையுங் காட்டி, நம்மைமீட்டுவிடுவிக்கும்படியாக, கிறிஸ்து இரட்சகர்செய்ததையும் பட்டதையும் நமக்குவெளிப்படுத்துகின்றது.

1. பிரசங்கத்தினுலே சுவிசேஷம் செவியில்க் கேட்கப்படுகின்றது. "காதுள்ளவன் அதைக்கேட்கக்கடவன்."

2. மனதிலேயும் அதுபட்டுத்தெளிவுகொ[illegible]க்கிறதினுலேயும்,

3 அது இருதயத்திலேயும் பட்டு, சீவனையுஞ் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் வருவிக்கிறதினுலேயும்[illegible]

4 நடக்கையையுஞ் செய்கையையும்[illegible]னுலேயும், சுவிசேஷம் இரட்சிப்பைக்கொடுக்கிறதாயிருக்கிறது[illegible]

III சுவிசேஷம் எல்லாவிதமான [illegible] பிரசன்னமாயிற்று.

1. தேசவேற்றுமையில்லாமல் யூ[illegible]சத்தாருக்கும் பொதுவாக அது பிரசன்னமாயிற்று.

2. குல்வேற்றுமையில்லாமல் [illegible] அனைவருக்கும் பிரசன்னமாயிற்று.

3. ஒழுககமுள்ளவர்களுக்கும் ஒ[illegible]யில்லாதவர்களுக்கும், புறமபே கொஞ்சமாக மீறுகிறவர்களுக்கும்[illegible]திகமாக மீறுகிறவர்களுக்கு மாகிய அனைவருக்கும அதுபிரசன்னமாயிற்று.

சுவிசேஷத்தினுலுண்டாகிய இ[illegible]ட்சிப்பு இனிமேல்த்தான் கொடுக்கப்போகிறதென்றல்லஇப்பொழுதும்அதைக்கொடுக்கின்றது. உரோ. ய. அ.

IV இவ்வுலகத்திலே பரிசுததமு[illegible]ளவர்களாய்ச் சீவனம்பண்ணும்படிக்குச் சுவிசேஷம்போதிக்கின்றது.

1. பரிசுத்தநடக்கையாவ தின்னதென்று, நமக்குக்காட்டுகிற வெளிச்சம்போலிருக்கின்றது. எப்படியெனில்,

(க) வெறுக்கவேண்டியவைகளைக் காட்டுகிறது. அவபத்தியையும் இலவுகீகஇச்சைகளையும் வெறுக்கவேண்டும். இதில் அவபத்தியென்பது முதல் நான்கு கற்பனைகளுக்கு விரோதமாயுள்ளபாவங்களையும் இலவுகீகஇச்சையென்பது மற்ற ஆறு கற்பனைகளுக்கு விரோதமாயுள்ளபாவங்களையுந் தொகுக்கிற வார்த்தைகளாம்.

(உ) செய்யவேண்டியவைகளையுங்காட்டுகின்றது.

நற்புத்தியாய் நடக்கவேண்டும். இது தன்முயற்ச்சியைக்காட்டுகின்றது.

நீதியாய் நடக்கவேண்டும். இது பிறருக்குச் செய்யவேண்டியகடமையைக் காட்டுகின்றது,

மெய்த்தேவபத்தியாய் நடக்கவேண்டும். இது பராபரனுக்குச்செய்யவெண்டிய கடமையைக் காட்டுகின்றது.

2. இந்தப்பரிசுத்தநடக்கை அவசியமாய்வேண்டுமென்றுங் காட்டுகின்றது. பரிசுத்தமில்லாமல் ஒருவனும் பராபரனைத் தரிசிப்பதில்லை.

3. நாம்பரிசுத்தநடக்கையுள்ளவர்களாகிறதற்கு வகையின்னதென்றுங் காட்டுகின்றது. கிறிஸ்துநாதரை எப்பொழுதும் விசுவாசத்தினாலே கண்ணோக்கும்படியாயும் நம்மையேவுகின்றது.

படிப்பனை.

1. சுவிசேஷஉபதேசங்களையும் கள்ள உபதேசங்களையும பகுத்தறியும்படியாக எச்சரிக்கையாயிருக்கவெண்டும்.

2. நீங்கள் பராபரனுடைய கிருபையை வீணாய்ப் பெறுதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். உ. சொரி. ௬. உ. (உ. ௰௬.)

3. சுவிசேஷம் உங்களுக்கு அருமையாயிருக்கத்தக்கதாகவும், அதின் அருமையை மற்றவர்களுக்கு ஒப்புவிக்கத்தக்கதாகவும், நாளுக்கு நாள் தேறும்படி கவலையுள்ளவர்களாயிருங்கள்.

———o———

GOVERNMENT REGULATIONS.

தேச சட்டங்கள்.

கிறிஸ்து ௲அ ௱ஹுதது. ௰கவதுசட்டம்.

டர்ச்சி.]

அவசியமானபோதுமேஜிஸ்திரொட்டுகள்துரைத்தனத்தாருக்கு யெழுதிக்கொள்ள வேண்டியது.

தனத்தாருடை

௫௬

சர்ந்த காரியங்களைக்குறித்து மேஜிஸ்திர கவுசியமாய்த்தோன்றினபோது துரைத் ழுதிக்கொள்ளவேண்டியது.

கிறிஸ்து ௲அ௱உஉம்வரு ஷத்து ௫வது சட்டம்.

க

௲அ௱உம்ஹு து உஅவது ௬௰வது சட்டங்களின்படிஜில்லாநியாயச்ச பயாராலே சுருக்கமாக விசாரிக்கத்தக்க சிலவிவகாரவி ங்களை முதலிலே விசாரிக்கும்படி க லேக்கட்டர்க து அதிகாரங்கொடுக்கிறதற்காகவும் மேற் காட்டிய வி களைக்குறித்து மேற்படிசட்டங்களின் நிபந்தனைக வேறுபடுத்துகிறதற்காகவும் ௲அ௱உம்ஹு த்து ௬உவது டத்தைத் தள்ளிவிடுகிறதற்காகவும் அந்தசட்டபடி ஜில்லாநியாயச்சபையில் விசாரிக்கத்தக்க வியாட்சியங்களை கலேக்கட்டர்கள் சுருக்கமாக விசாரிக்கும்படி செய்கிறதற்காகவும் இப்படிப்பட்டசகலவியாட்சியங்களையும் தீர்க்கிறதற்காகப் பஞ்சாய்த்தாரிடத்தில் அனுப்பிவிக்கிறதற்கு கலேக்கட்டர்களுக்கு அதிகாரங் கொடுக்கிறதற்காகவும் ௲அ௱௰௬ஹுத்து ௰உவதுசட்டநி

பந்தனைகளை அதிகப்பிரயோசனமுடையதாகச் செய்கிறதற்காகவும் விதிக்கப்பட்டசட்டம். யித் சாலிவாகன சகாப்தம் ௲௭௱௪௰வது சித்திரபானுஹு ஆடிமீ௬௨க்குச்சரியான ௲அ௱உம்ஹு ௲௭௰மீ௰௬௨ சென்னபட்டணத்துக்கோட்டை ஆலோசனை சபையில் கவர்னரவர்களாலே விதிக்கப்பட்டுது.

௲அ௱உம்ஹுத்து உஅவது ௬௰வது சட்டநிபந்தனைகளி பீடிகை.
னாலே நிலத்துக்குடையவர்களுக்குக் கொடுக்கப்பட்டஅதிகாரம் சீக்கிரத்தில் நடப்பிவிக்கத்தக்கதாகவும் சுருக்கமுடையதாகவுமிருக்கும்பொழுது அந்த அதிகாரத்தை மேற்படியார் அனியாயமாகநடப்பிவித்தால் அதைக்குறித்து வியாட்சியச்சிலவுக்குப் போதாததாயிருக்கிற ஆஸ்தியுடைய குடிகளுக்குத்தகுதியான நியாயம் கிறமமானவியாட்சியஞ் செய்கிறதினாலே கிடைக்கவேண்டும். ஆகையால், குடிகளுடையசவிக்கியத்துக்கு மேற்படிசட்டநிபந்தனைகள்தகுதியுடையதுக ளல்லாததுகளாகக் காணப்பட்டபடியினாலேமேற்காட்டியசட்டநிபந்தனைகளின்படி நியாசசபைகளிற்சுருக்கமான விசாறணையாக விசாரிக்கத்தக்க வியாட்சியங்களில் துரைத்தனத்தாரவர்களுடைய அ கள் கட்சிக்காறரல்லாதவர்களாயிருக்கிறவியாட்சி ல க்கட்டர்கள் முதலிலே விசாரிக்கும்படியாக டங்களின்பிரகாரமுதலிலே தண்டனைவிதி ம் அவர்கள்செய்ததீர்ப்புகளின்பேரிற் கட் மதமானால் விவகாரவிசாரணை நியாயச யங்களை மறுவிசாறணையிற் கொண்டுபே டியாகவுஞ் செய்கிறதுஅவசியமானதென்றுதோற்ற டபடியினாலேயும்,

மேலும் நிலத்தின் அனுபவம் பயிரிடுச) தண்ணீர்பாய்ச்சல் யிதுகளைப்பற்றிச் சடுதியில் வலுவ ாலுண்டாகிற கலகத்திற்கு ௲அ௱உம்வருஷத்து ௬உவ சட்டநிபந்தனைகளினாலுண்டாகிற பரிகாரம்வேண்டிய ட்டுக்கும் சமயத்துக்கு ஒத்துக்கொள்ளாததாயிருக்கிறபடியினாலே மேற்படிசட்டத்தைத்தள்ளுகிறதும் அந்தச்சட்டப்படி விவகாரவிசாரணை நியாயசபையார்செய்துவந்த சுருக்கமானவிசாறணையை சீமாமூலக்கலேக்சட்டர்கள் சுருக்கமாய் நடத்தும்படிசெய்கிறதும் யுக்ததமாய்க்காணப்பட்டபடியினாலேயும்,

———o———

நாளது சங்கதிகள்.

ஐரோப்பாக்கண்டம். புருசியாதேசத்துஇராசா சவாரிபண்ணியிருக்கும் போது யாரோ ஒரு கள்ளன் அவரைச் சுட்டுக்கொன்றுபோட பிரயத்தனஞ் செய்ததில், குண்டு அவர் தோளில்ப்பட, இலேசான ஒரு காயமுண்டாயிற்றென்று போனமாதஞ் செய்தி

தெரிய வந்தது. அந்தக் காயத்தினால் அவர் சில நாள் சற்றதிகமா
வருத்தப்பட்டதாயும், இப்போது நன்றாய்ச் சுகமாயிருக்கிறதாயு
இந்த மாதஞ் செய்தி வந்திருக்கிறது. அந்தப் பாதகனுக்குச் செய்ய
ப்படும் ஆக்கினை இன்னதென்று இன்னந் தீர்க்கப்படவில்லை
இதற்கு முன் தென்மார்க்கு இராச்சியத்தைச் சேர்ந்த சிலெஸ்விக்
ஹொலுஸ்தைன், என்னும் இரண்டு நாடுகளைக் குறித்துப் புருசியாஇரா
சாவுக்குந் தென்மார்க்குஇராசாவுக்குமுண்டான வியாச்சியம் இன்
னந் தீராததினாலே இருவரும் படைகளைச் சேகரித்துக் கொண்டு
கோட்டைகளைப் புதுப்பித்து, யுத்தஞ்செய்யப் பிரயத்தனம் பண்ணு
கிறார்கள்.

இங்கிலாந்து தேசத்துக்குங் கிரேக்கைதேசத்துக்குமுண்டான
வியாச்சியம் பிறான்ஸ் தேசத்தின் மத்தியஸ்தத்தினாலே ஒப்புரவாகத்
தீராதென்றும், ஆகவேண்டிய நியாயத்தைப் பலவந்தத்தினாலே
வாங்க வேண்டுமென்றும் இங்கிலாந்துஇராச்சியத்தின் அதிபதிகண்டு
யுத்தஞ் செய்வதற்கு எத்தனித்த போது, கிரேக்கை தேசத்தின் இரா
சா இணங்கி, இங்கிலிஸ்க்காரர் கேட்டபடி சம்மதித்து, தம்மால வர
வேண்டிய தொகைப்பணத்தைச் செலுத்தினார். அதைப்பற்றி பிரா
ன்ஸ்இராச்சியத்தின் அதிகாரிகள் விசனப்பட்டு, லண்டன்நகரியில
ஸ்தாபகமாயிருக்கிற தங்கள் தானாபதி வந்துவிடக் கற்பித்தார்கள்.
இந்தச் சங்கதியினாலே இங்கிலாந்து இராச்சியத்திற்கும் பிறான்ஸ்
இராச்சியத்திற்குஞ் சண்டைக்கேதுவான பொறாமை யெழும்பாத
படிக்கு, எல்லாருக்கும் பொருத்தமான விதமாய் முடிவு செய்ய இங்
கிலிஸ்க்காரியஸ்தர் வ... ...து, பிரயாசப்படுகிறார்கள்.

பிறான்ஸ் தேச ... ...ற்காலத்துக்குச் சற்றே அமைதலா
யிருந்தும் ... ...த கலக்கமும், இதற்கு முன்னே
... ...ண்டாவதற்கு ஏதுவாயிருக்கிறது.
... ...சத்தார் அரசாளுகையை மாற்றி,
... ...ஸ்தாபிக்கும்பொழுது, “இராச்
... சமவரிசைக்காரர், சகோதரர்”
...று ...
...இராச்சியப்ப... ...ங்களுக்கு மூலாதாரச் சட்டமாக
...ர்கள். அந்தப்பிர... ...னஞ் செம்மையும் உத்தமுமான
...று தோன்றியதாலும், அ... ...நேகம் பேருடைய மனதில் மகா
... கருத்துள்ளதாயிருந்தது எப்படியென்றால், பெரியோர்
...பாரென்றும், ஐசுவரியந்த... ...திரமென்றும், எசமான் வேலைக்
...னென்றுஞ் சொல்லிய பே... ...ங்கள் இனிமேலிருக்கப்படாதென்
றும்; தேசத்திலுள்ள ஆஸ்தி ...ல்லாந் தேசத்தாரெல்லாருக்கும்
பொதுவாய்ப் பங்கிடப்படவேண்டுமென்றும், அவர்கள் நினைத்துக்
கொண்டிருந்தார்கள். அந்தவகைக்காரர் அந்தத் தேசமெங்கும்
இந்த நாட்களில் மிகுதியாய்ப் பெருகி, பெலன்கொண்டு, தகுதியான
சமையத்தில் ஒன்றாயெழும்பவும். சருவ கொள்ளை செய்யவும். இர
சியமாய் ஆலோசனை செய்கிறார்கள். அந்தரங்கமாய் மேற்சொல்ல
யபடி நினைவுகொண்ட அநேகம் பேர் குடிகளுடைய அநுமதியை
பெற்று இராசாங்கசங்கத்தாராகத் தெரிந்துகொள்ளப்பட்டதுமன்றி
இப்பொழுது வெளியரங்கமாய் அத்தன்மையான யோசனைகளை
பாராட்டிப் பிரசித்தஞ் செய்திருக்கிற ஐஜேன் சூ என்கிற ஒருமனு
ஷன் அப்படியே தெரிந்துகொள்ளபபட்டு, சங்கத்தைச் சேர்ந்திரு
கிறதினாலே, அவ்வகைக்காரரான மற்றநேகர் ஏற்படாதபடி, இத
முதல், சங்கத்தாரைத் தெரிந்துகொள்ளுகையில், யோக்கியமற்ற
சனம் அநுமதிச்சீட்டுப் போடக்கூடாதென்கிற புதுச் சட்டத்தை
சங்கத்தார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

Library's copy lacks back wrapper

END OF ISSUE